**சார்பு நீதிமன்றம். துறையூர்**

**முன்னிலை .. திரு. C.விஜய் கார்த்திக் M.A,M.L.,**
**சார்பு நீதிபதி,**
**துறையூர்.**

**2025-ம் ஆண்டு ஜுலை மாதம் 19-ம் நாள் சனிழமை**
**இடைநிலை மனு எண்.5/2025 இன் அசல் வழக்கு எண்.99/2022**

செந்தில் வடிவு

.... மனுதாரர்/வாதி

/எதிராக/

1. அருட்செல்வி
2. அன்புசெல்வி
3. சாந்தி
4. அருள்மணி (எ) அருள்மொழி

.... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு இறுதியாக என் முன்பு கடந்த 23.06.2025 -ம் தேதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.V. ராமமூர்த்தி ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.N. தனசேகரன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள் கேட்டும், மனுக்கள் ஆவணங்களை பரிசீலனை செய்தும் நீதிமன்றம் வழங்கும்...

**உத்தரவு**

வ.இ.ம.எண்.4/2024 மனு கோப்பினை ஆய்வு செய்து 18.02.2025 -ம் தேதி Error Apparent on the face of the record ஆக ஏற்பட்டுள்ள உத்தரவை மறு பரிசீலனை செய்து வ.இ.ம.எண்.4/2024 மனுவை இம்மனு மனுதாரர் ஏற்கனவே தாக்கல் செய்துள்ள எதிர்மனுவுரையின் அடிப்படையில் தீர விசாரித்து தகுதியின் அடிப்படையில் தகுந்த உத்தரவு வழங்க கோரி உ.வி.மு.ச கட்டளை 47 விதி 1 சி.பி.சி மற்றும் பிரிவு 114-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுதாரரின் மனுசுருக்கம்:-**

2.மனுதாரர் அசல் வழக்கில் வாதி. இம்மனுவில் மனுதாரர். வ.இ.ம.எண்.4/2024-ல் எதிர்மனுதார் ஆவார். அசல் வழக்கை மனுதாரர் பாக பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார். 12.11.2024 -ம் தேதி வழக்கு வாதிகள் Order 1 Rule 10 CPC படி கூடுதலாக 9 நபர்களை சேர்க்க கோரி ஒரு மனுவை

தாக்கல் செய்து அதில் கண்ட 9 நபர்களுக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டது. 9 வது உத்தேச எதிர்மனுதாரர் நோ்டீஸ் வாங்க மறுத்துவிட்டதால் தோன்றாதரப்பினராக வைக்கப்பட்டு 17.02.2025 அன்று வாய்தா வைக்கப்பட்டது. அன்றைய தேதியில் எதிர்மனுதாரர்/வாதி விரிவான எதிருரை தாக்கல் செய்து மனுவை தள்ளுபடி செய்ய கோரியுள்ளார். இந்நிலையில் 1 முதல் 8 உத்தேச தரப்பினர்கள் எதிருரை இல்லை என கூறியுள்ள நிலையில் 18.02.2025 இந்த மனுதாரர் தரப்பிலும் எதிருரை இல்லை என தெரிவித்துவிட்டதாக கூறி Error Apparent ஆக கருதி எதிர்மனுதாரர்கள் அனைவரும் எதிருரை இல்லை கூறிவிட்டதாகவும், மனு அனுமதிக்கப்படுவதாகவும் வழக்குரையை திருத்தம் செய்ய வேண்டுமென 04.03.2025 வாய்தா ஏற்பட்டுள்ளது. வ.இ.ம.எண்.4/2024 மனுவை மனுதாரர் தரப்பில் Tooth and Nail ஆட்சேபனை செய்து எதிருரை 17.02.2025 அன்று தாக்கல் செய்துள்ளார். எதிர்மனுவுரையை வலியுறுத்தவில்லை என எந்த குறிப்பும் மனுதாரர் தாக்கல் செய்யவில்லை. எனவே, வ.இ.ம.எண்.4/2024 மனு கோப்பினை ஆய்வு செய்து 18.02.2025 -ம் தேதி ஏற்பட்டுள்ள உத்தரவை மறு பரிசீலனை செய்து மனுதாரர் ஏற்கனவே தாக்கல் செய்துள்ள எதிர்மனுவுரையின் அடிப்படையில் தீர விசாரித்து தகுதியின் அடிப்படையில் தகுந்த உத்தரவு வழங்க கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>3-ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்து 1,2,4 எதிர்மனுதாரர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பதிலுரை சுருக்கம்:-</u>**

(3.1)மனு சட்டப்படி செல்லத்தக்கதல்ல. 18.02.2025 அன்று I.A 4/2024 மனு நீதி நலனை பொறுத்து அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும், உத்தேச எதிர்மனுதாரர்கள் எதிருரை இல்லை என தெரிவித்துள்ளதாகவும், திறந்த நீதிமன்றத்தில் குறிப்பிடப்பட்டு மனு முடிக்கப்பட்டுவிட்டது. மனுதாரர் Error Apparent என்று கூறியுள்ளது ஏற்க இயலாது. எதிர்மனுவுரை மீது எவ்வித விசாரணையும் நடைபெறவில்லை என்றும், மனு அனுமதிக்கப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளது நீதிமன்றத்தின் மீது மனுதாரர் வேண்டுமென்றே குற்றம் சுமத்தப்பார்க்கிறார் என்பதேதவிர வேறொன்றும் இல்லை. இதற்கு ஆவணத்தின் முகப்பிலேயே வெளிப்படையான பிழை என்ற கருத்தை பயன்படுத்த முயல்வது சட்ட விரோதம். நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை எதிர்த்து மேல்முறையீடு செய்துகொள்ளலாமே தவிர இதே நீதிமன்றத்தில் இதே உத்தரவிற்கு மறு ஆய்வு செய்ய கேட்பது சட்டப்படி செல்லாது. Sec.114 & Order 47 Rule 1 என்பது இதற்கு பொருந்தாது. இலத்தின் சட்ட முதுமொழி நீதிமன்றத்தால் நேர்வது யாருக்கும் பாதிப்பில்லை என்பதை மனுதாரர் வசதியாக மறந்துவிட்டு இந்த மனுவை தாக்கல் செய்திருப்பது சட்டப்படி செல்லாது.

(3.2)நீதிமன்றம் I.A.4/2024 -க்குரிய அனைத்து அம்சங்களையும் நன்கு ஆராய்ந்து அதன் பேரில் பரிசீலனை செய்து சட்டப்படியான உத்தரவு பிறப்பித்துள்ளது. நீதிமன்ற உத்தரவில் எவ்வித தகவலும் இல்லை. (No errors) வாதி வழக்கில் உண்மை சங்கதிகளை கொண்டு வந்துபரிகாரம தேட விரும்பாமல் வழக்கை இழுத்தடிக்க வேண்டும் என்று கெட்ட எண்ணத்தில் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார் என்பதே உண்மையாகும். மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள Error Apparent on the face of record (ஆவணத்தின் முகப்பிலேயே வெளிப்படையான பிழை) என்பது பொய்யாகும். மனு தள்ளுபடி செய்ய வேண்டும்.

**<u>8 வது உத்தேச எதிர்மனுதாரர் தாக்கல் செய்து 1 முதல் 7 உத்தேச எதிர்மனுதாரர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரை சுருக்கம்.</u>**

(4.1)மனு சட்டப்படி செல்லத்தக்கதல்ல. 18.02.2025 அன்று I.A 4/2024 மனு நீதி நலனை பொறுத்து அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும், உத்தேச எதிர்மனுதாரர்கள் எதிருரை இல்லை என தெரிவித்துள்ளதாகவும், திறந்த நீதிமன்றத்தில் குறிப்பிடப்பட்டு மனு முடிக்கப்பட்டுவிட்டது. மனுதாரர் Error Apparent என்று கூறியுள்ளது ஏற்க இயலாது. எதிர்மனுவுரை மீது எவ்வித விசாரணையும் நடைபெறவில்லை என்றும், மனு அனுமதிக்கப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளது நீதிமன்றத்தின் மீது மனுதாரர் வேண்டுமென்றே குற்றம் சுமத்தப்பார்க்கிறார் என்பதேதவிர வேறொன்றும் இல்லை. இதற்கு ஆவணத்தின் முகப்பிலேயே வெளிப்படையான பிழை என்ற கருத்தை பயன்படுத்த முயல்வது சட்ட விரோதம். நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை எதிர்த்து மேல்முறையீடு செய்துகொள்ளலாமே தவிர இதே நீதிமன்றத்தில் இதே உத்தரவிற்கு மறு ஆய்வு செய்ய கேட்பது சட்டப்படி செல்லாது. Sec.114 & Order 47 Rule 1 என்பது இதற்கு பொருந்தாது. இலத்தின் சட்ட முதுமொழி நீதிமன்றத்தால் நேர்வது யாருக்கும் பாதிப்பில்லை என்பதை மனுதாரர் வசதியாக மறந்துவிட்டு இந்த மனுவை தாக்கல் செய்திருப்பது சட்டப்படி செல்லாது.

(4.2)நீதிமன்றம் I.A.4/2024 -க்குரிய அனைத்து அம்சங்களையும் நன்கு ஆராய்ந்து அதன் பேரில் பரிசீலனை செய்து சட்டப்படியான உத்தரவு பிறப்பித்துள்ளது. நீதிமன்ற உத்தரவில் எவ்வித தகவலும் இல்லை. (No errors) வாதி வழக்கில் உண்மை சங்கதிகளை கொண்டு வந்துபரிகாரம தேட விரும்பாமல் வழக்கை இழுத்தடிக்க வேண்டும் என்று கெட்ட எண்ணத்தில் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார் என்பதே உண்மையாகும். மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள Error Apparent on the face of record (ஆவணத்தின் முகப்பிலேயே வெளிப்படையான பிழை) என்பது பொய்யாகும். மனு தள்ளுபடி செய்ய வேண்டும்.

5.இருதரப்பு மனுக்கள், ஆவணங்களை பரிசீலனை செய்ததில், இம்மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதாகும்.

**தீர்வு..**

(6.1)இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. மனுதாரர் இம்மனுவை இடைநிலை மனு எண்.4/2024-ல் விரிவான எதிருரை தாக்கல் செய்யப்பட்டிருந்தும் விசாரணை நீதிமன்றம் எதிருரை தாக்கல் இல்லை என தெரிவித்து மனுவை அனுமதித்துள்ளதால் விசாரணை நீதிமன்றம் மேற்படி இடைநிலை மனு 4/2024 -ல் பிறப்பித்த உத்தரவை மறு பரிசீலனை செய்ய வேண்டுமென வேண்டியுள்ளார். இதனை மறுத்து எதிர்மனுதாரர்கள் தரப்பில் பதிலுரை தாக்கல் செய்து இந்த மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென தெரிவித்து வாதிடப்பட்டுள்ளது. இடைநிலை மனு எண்.4/2024 மனு 9 உத்தேச தரப்பினர்களை வழக்கில் சேர்க்க பிரதிவாதிகள் தாக்கல் செய்து உத்தேச தரப்பினர்களுக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டு 1 முதல் 8 உத்தேச தரப்பினர்கள் பதிலுரை இல்லை என மேற்குறிப்பு செய்துள்ளனர். ஆனால் எதிர்மனுதாரர்/வாதி அந்த மனுவில் 17.02.2025 -ம் தேதி பதிலுரை தாக்கல் செய்துள்ளார். ஆனால் இந்நீதிமன்றம் தனது உத்தரவில் எதிர்தரப்பினர்கள் பதிலுரை இல்லை என தெரிவித்ததால் அம்மனு நீதியின்பால் அனுமதிக்கத்தக்கது என அனுமதித்து உத்தரவிட்டுள்ளது.

(6.2)உரிமையியல் விசாரணை நடைமுறை சட்டப்பிரிவு 114 மற்றும் கட்டளை 47 விதி 1-ன் படி நீதிமன்ற உத்தரவில் பாதிக்கப்பட்ட நபர் மேல்முறையீடு தாக்கல் செய்யாமல் உத்தரவில் ஏற்பட்டுள்ள குறைகளை சரி செய்ய மறு ஆய்வு மனு தாக்கல் செய்யும் பட்சத்தில் நீதிமன்றம் தனது உத்தரவை தகுந்த காரணங்களுக்காக மறுபரிசீலனை செய்யலாம் எனவும் சில தவறுகள் வெளிப்படையாக தெரியும் பட்சத்தில் மேற்படி தவறுகளை சரி செய்யலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் இ.நி.ம.எண்.4/2024 அனுமதி செய்யப்பட்டதில் வெளிப்படையான பிழை இல்லை அம்மனு நீதியின்பால் அனுமதிக்கப்பட்டது என தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் அம்மனு பதிலுரை சங்கதிகளை பரிசீலித்து தீர்வு காணப்படவில்லை. ஆகையால் இந்நீதிமன்றம் மனுதாரர்/வாதி மேற்படி இ.நி.ம.எண்.4/2024 மனுவில் பதிலுரை தாக்கல் செய்ததை கவனத்தில் கொண்டு பதிலுரை சங்கதிகளை பரிசீலித்து மனுதாரருக்கு வாய்ப்பு வழங்கி இருதரப்பு வாதம் கேட்டு உத்தரவு பிறப்பிக்காததால் மனுதாரர்/இம்மனுவில் வேண்டியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கது என இந்நீதிமன்றம் முடிவு செய்து மேற்படி மனுவில் முறையாக தீர்வு காண்பதற்காகவும், பின்னிட்டு ஏற்படும் வழக்குகளை தவிர்ப்பதற்காகவும், வழக்கின் தன்மையை கருத்தில் கொண்டும் இம்மனுவை அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. இ.நி.ம.எண்.4/2024 மனுவை மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு மனு மற்றும் பதிலுரை சங்கதிகளின் அடிப்படையில் இருதரப்பையும் கேட்டு தகுதியின் அடிப்படையில் உத்தரவு பிறப்பிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித கஷ்டமும் நஷ்டமும் ஏற்படப்போவதில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

இறுதியாக, இந்த மறு ஆய்வு மனு அனுமதிக்கப்பட்டு இந்நீதிமன்றம் இ.நி.ம.எண்.4/2024-ல் கடந்த 18.02.2025-ம் தேதி பிறப்பித்த உத்தரவு ரத்து செய்யப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இன்று 2025-ம் ஆண்டு ஜூலை மாதம் 19-ம் நாள் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு மொழியப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு பிழைதிருத்தம் செய்யப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியபகரப்பட்டது.

(Sd)/-C. Vijay karthik
சார்பு நீதிபதி,
துறையூர்.

**மனுதாரர், எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்.** இல்லை.

(Sd)/-C. Vijay karthik
சார்பு நீதிபதி,
துறையூர்.